# Tamil Nadu Bishops' Council (TNBC)
# Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)

TNLBC Secretariat | 22/45, Santhome High Road | Chennai - 600 004 | Tamil Nadu | India
T : 044-24611949 | P : 97512 08059 | E : tnbctnlbc@gmail.com | Web : www.tnbc.in


**06.12.2025**

## <u>தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவை வழங்கும்</u>

## <u>சமூக நல்லிணக்கத்திற்கான அறிக்கை</u>

நாம் குடிமக்களாய் வாழும் இந்திய திருநாட்டில் அமைதிக்குப் பெயர் பெற்ற, நமது மாநிலமான தமிழ்நாடு கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவ உதவி, அடிப்படை. கட்டமைப்புகள், மேம்பாடு என பல தளங்களில் மற்ற மாநிலங்களை விட மிகவும் வளர்ச்சி அடைந்த மாநிலமாகத் திகழ்கிறது. இதற்கு தமிழ்நாட்டு மக்களின் உழைப்பும், ஆட்சியாளர்களின் சிறந்த திட்டங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் தங்கள் சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து அமைதியிலும் ஒற்றுமையிலும், சமத்துவமும் சகோதரத்துவமும் கொண்ட மனநிலையோடு மக்கள் அனைவரும் வாழ்வதும் மிக முக்கியமான காரணிகள் ஆகும். அண்மைக் காலங்களில், தமிழ்நாட்டில் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் பல செயல்கள் நடைபெற்று வருவது, நம் அனைவருக்கும் மிகுந்த கவலை அளிக்கிறது; மனதிற்கு வேதனை தருகிறது.

மக்கள் மேம்பாட்டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அமைதி, நீதி போன்றவை உண்மையாகவே அடிப்படைக் காரணிகளாக இருப்பதால், அமைதியை உயர்த்திப் பிடிப்பதில் நாம் அனைவரும் மேலோங்கிய ஒரு சமூகமாக இணைந்து செயல்பட வேண்டிய தேவை அதிகரித்திருக்கிறது. எனவே அரசியல் நோக்கங்களோடு சமூகத்திற்கு ஆபத்து விளைவிக்கும் செயல்பாடுகளைப் புறந்தள்ளி, தமிழ்நாட்டு மக்களாகிய நாம், அமைதி மற்றும் வளர்ச்சியான சூழலில் தொடர்ந்து வாழ அனைத்து வேறுபாடுகளையும் கடந்து சகோதர மனநிலையோடு, சமூக நல்லிணக்கத்தை நிலை நாட்டுவோம். தமிழ்நாடு சமூக விரோதிகளின் கைகளில் சிக்கி தனது எதிர்காலத்தை தொலைத்து விடாமல் இருக்க நாம் அனைவரும் ஒற்றுமையான எண்ணங்களோடு சமூக நல்லிணக்கத்திற்கு தொடர்ந்து உழைப்போம். இந்த மேலான நோக்கத்திற்காக உழைக்கும் மனிதநேய சக்திகளோடு கரம் கோர்ப்போம். சாதியின் பெயரால், சமயத்தின் பெயரால் நம்மை பிரித்தாலும் சூழ்ச்சிகளை இனம் கண்டு, அவைகளை வேரோடு களைந்தெறிந்து, தமிழ்நாட்டில் அமைதி, ஒற்றுமை நிலவிட, எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள், உடன்பிறவா சகோதர சகோதரிகள் என்ற மனநிலையோடு வாழ, தமிழக ஆயர் பேரவை தனது ஆவலை தெரிவித்துக் கொள்கிறது. இதற்காய் இறைவனிடம் இறைஞ்சி வேண்டுகின்றது.

+ George Antonysamy

**மேதகு ஜார்ஜ் அந்தோணிசாமி**
**தலைவர், தமிழக ஆயர் பேரவை**
**சென்னை-மயிலை உயர்மறைமாவட்டப் பேராயர்**

TAMILNADU BISHOP'S COUNCIL
President
CHENNAI - 600004


PRESIDENT
Most Rev. Dr. George Antonysamy
Archbishop of Madras-Mylapore
Archbishop's House, No. 41,
Santhome High Road, Chennai - 600 004
Tel : 044 2461102, 24640833
Email : abpmmsec@gmail.com

VICE PRESIDENT
Most Rev. Dr. Lawrence Pius
Bishop of Dharmapuri
Bishop's House, Post Box 32,
Gundalapatty Medu, Dharmapuri- 636701,
Ph : 04342-2288409
Email : dharmapuridiocese@gmail.com

SECRETARY
Most Rev. Dr. Nazarene Soosai
Bishop of Kottar
Bishop's House, P.B. No. 17, Nagercoil
Kanyakumar Dt.- 629 001.
Tel : 04652-278343, 279152
Email : kottardiocese@yahoo.co.in

TREASURER
Most Rev. Dr. S. Antonysamy
Bishop of Palayamkottai
Catholic Bishop's House,
Post Box 108, Palayamkottai,
Tirunelveli - 627011,
Tel : 0462-2522114,
Email : palayamkottaidiocese.org